
# தமிழ்ப் பல்கலைக்கழகச் செய்தி மலர்

மலர்: 8 | திருவள்ளுவர் ஆண்டு 2020-ஆவணி 29 -14-9-'89 | இதழ்-6


## உதகமண்டலம் தமிழ்ப் பல்கலைக்கழக மலையின மக்கள் ஆய்வுமைய அருங்காட்சியகக் கால்கோள் விழா





மலையினமக்கள் ஆய்வுமைய அருங்காட்சியகக் கட்டட மாதிரி


உதகமண்டலத்திலுள்ள தமிழ்ப் பல்கலைக்கழக மலையின மக்கள் ஆய்வுமைய அருங்காட்சியகத்தின் கால்கோள் விழா 12-9-89 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் தொடங்கியது. விழாவிற்குத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். தமிழக அரசின் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருட்டிணன் அவர்கள் முன்னிலையில், தமிழக அரசின் கல்வி அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் உதகை மலையின மக்கள் ஆய்வு மைய அருங்காட்சியகக் கலைக்கூடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.



## தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குச் சட்டப்பேரவைத் தலைவர் வருகை

தமிழக அரசின் சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்கள் 16-8-89 பகல் 1 மணியளவில் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு வருகை புரிந்தார்கள். பல்கலைக்கழகக் கணிப்பு மையத்தின் பல்வேறு பணிகளைப் பார்வையிட்டு, தமிழில் பல ஆக்கப் பணிகளைக் கணிப்பொறி மூலம் புரிந்துவரும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பணிகளைப் பாராட்டினார்கள்.

பேரவைத் தலைவர் அவர்கள் தமிழ்ப் பல்கலை கழக வெளியீடுகளைப் பார்வையிட்டார்கள்.



பேரவைத் தலைவர் அவர்கள்
தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகளைப் பார்வையிடுதல்

## அனைத்துலக எழுத்தறிவு தினவிழா

தமிழ்ப் பல்கலைக்கழக வயதுவந்தோர் கல்வித்துறை அம்மாப்பேட்டை ஒன்றியத்தைச் சார்ந்த காந்தி கிராமத்தில் 8-8-89 அன்று இரவு 7-30 மணி அளவில் அனைத்துலக எழுத்தறிவு தினவிழாவைக் கொண்டாடியது.

அனைத்துலக எழுத்தறிவு ஆண்டான 1990-ஆம் ஆண்டில் 100 விழுக்காடு எழுத்தறிவு நிலையினை அடைய, தமிழ்ப் பல்கலைக்கழக வயதுவந்தோர் கல்வித்துறை இக்கிராமத்தைத் தெரிவு செய்துள்ளது. இக்கிராம மக்கள் எழுத்தறிவின் தேவையை உணரும் வகையில், முதல் நிகழ்ச்சியாக இந்த 'அனைத்துலக எழுத்தறிவு தினவிழா' கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில், எழுத்தறிவு தினம் பற்றிய சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. அந்நிகழ்ச்சிக்கு வந்திருந்தோரை முனைவர் கு. அண்ணாதுரை (உதவி இயக்குநர், வயதுவந்தோர் கல்வித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்) வரவேற்றுப் பேசினார். முனைவர் சு. இராசாராம் (மதிப்புறு இயக்குநர், வயதுவந்தோர் கல்வித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்) இவ்விழாவிற்குத் தலைமை தாங்கினார். அவர் தமது தலைமையுரையில், எழுத்தறிவு தினம் கொண்டாடப்படுவதன் நோக்கம் பற்றியும், தமிழ்ப் பல்கலைக்கழக வயதுவந்தோர் கல்வித்துறை இக்கிராம மக்களுக்குச் செய்ய உள்ள பணிகள் பற்றியும் விவரித்தார். அம்மாப்பேட்டை ஒன்றிய வளர்ச்சி ஆணையர் (திட்டம்) திரு மு. செல்வராஜ் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

திரு சி. சுப்பிரமணியன் (திட்ட அலுவலர், வயதுவந்தோர் கல்வித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்) நன்றி கூறினார்.

இவ்வாண்டு அக்டோபர் திங்களில் இக்கிராமத்தில் எட்டு வயதுவந்தோர் கல்வி மையங்கள் தமிழ்ப் பல்கலைக்கழக வயதுவந்தோர் கல்வித்துறையால் துவக்கப்படவுள்ளன. இம்மையங்களின் மூலம் இக்கிராமத்தில் இதுவரை எழுத்தறிவு பெறாத சுமார் 240 பேர் எழுத்தறிவு பெற்று இக்கிராமம் முழுவதும் எழுத்தறிவு நிலையினை அடைய உள்ளது.

## மொழி பெயர்ப்புப் புத்தொளிப் பயிற்சி-தொடக்கவிழா

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகப் புதிய வளாகத்தில் "இந்திய இலக்கியங்களும் மொழி பெயர்ப்பும்" எனும் புத்தொளிப்பயிர்சியின் தொடக்கவிழா 16-8-89 காலை 10 மணியளவில் நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக் கழகமும், பாரதிதாசன் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்தும் இப்புத்தொளிப் பயிர்சியின் தொடக்கவிழா நிகழ்ச்சியில் இரு பல்கலைக்கழகத் துணைவேந்தர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



தலைமையுரையாற்றிய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் "இப்பயிற்சியின் முக்கியக் குறிக்கோள் இந்திய இலக்கியங்களை, குறிப்பாகத் தமிழ் இலக்கியத்தின் தனித் தன்மையை வெளிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், ஓரளவு உலக இலக்கியங்களின் சாயலையும் உணர வழி வகுப்பதாகும்" என்றார்.

மேலும் அவர் தமது உரையில், "தமிழ் இலக்கியங்களை மேம்படுத்துவதோடு மட்டுமன்றி, உலக அரங்கில் அதன் சிறப்பினை ஒளிபெறச் செய்வது தமிழறிஞர்களின் கடமையாகும்" என்றார்.

இவ்விழாவில் பங்கேற்றுத் தொடக்கவுரையாற்றிய திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ச. முத்துக்குமரன் அவர்கள் இப்பயிர்சி தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் வண்ணம் இந்திய இலக்கியங்களின் தன்மைகள், மக்களின் மனப்பாங்கு,

எண்ணங்களின் ஒருமைப்பாடு ஆகியவற்றை அலசி ஆராயும் பயிற்சியாக அமைய வேண்டும்" என்று கூறினார்.

மேலும் அவர், "பல்வேறு மொழி பேசும் மக்களின் பழக்க வழக்கங்கள், ஒன்றுபட்ட எண்ணங்கள், கலாச்சாரங்கள்தான் இந்நாடு ஒன்றுபட்டு விளங்க உறுதுணையாக நிற்கின்றன" என்றும் கூறினார்.

இவ்விழாவில் தமிழ்ப் பல்கலைக்கழக மொழி பெயர்ப்புத்துறைத் தலைவர் முனைவர் பழனி.அரங்கசாமி வரவேற்புரையாற்றினார். பாரதிதாசன் பல்கலைக்கழக ஆசிரியப் பயிர்சிப் பள்ளி இயக்குநர் டாக்டர் சீ. புருசோத்தமன் நன்றி கூறினார்.

## மொழி பெயர்ப்புப் புத்தொளிப் பயிற்சி-நிறைவு விழா



தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகப் புலவிருந்தகக் கருத்தரங்கு அறையில் மொழி பெயர்ப்புப் புத்தொளிப் பயிற்சியின் நிறைவு விழா நடைபெற்றது. இவ்விழாவில் தலைமையுரையாற்றிய தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் டாக்டர் பெ.சின்னையன் அவர்கள், "உயர்கல்வி நிலையிலே மொழிபெயர்ப்புத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். பேராளர்களின் பங்கு இத்துறை வளர்ச்சிக்குப் பேருதவியாக அமையவேண்டும் "என்றார்.

மேலும் அவர் தமது உரையில், "கடந்த காலங்களில் மொழி பெயர்ப்பு வளர்ச்சியில் தொய்விற்குக் காரணம் சிறந்த மொழி பெயர்ப்பு நூல்களுக்குச் சிறப்பான இடம் அளிக்கப்படாததே. எனவே தான் முதன்முதலாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மொழி பெயர்ப்புக்கென்று ஒரு தனித் துறையை நிறுவியுள்ளது. தமிழ்ப் பல்கலைக் கழகம் சிறந்த மொழி பெயர்ப்பு நூல்களுக்கு ஆண்டு தோறும் பரிசுகள் வழங்கி வருகிறது எனக் கூறினார்.

இவ்விழாவில் சிறப்புரையாற்றிய அகில இந்திய வானொலி திருச்சி நிலைய இயக்குநர் திரு பி.யு.அயூப் அவர்கள், "பேராளர்கள் நமது கலாச்சாரத்தை வாழ்ந்து காட்டுவதன் மூலம் மாணவ சமுதாயத்தை விழிப்புணர்வு கொள்ளச் செய்யவேண்டும். கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றின் படி வாழும் மொழிகள்தான் வளர்கின்றன. ஆகவே நமது கலாச்சாரங்கள் வாழ்ந்து காட்டவேண்டியவை. வங்காள மொழிநூலான கீதாஞ்சலி ஆங்கிலமொழி மூலமாகத்தான் நோபல் பரிசு பெற முடிந்தது. இது போன்று நமது தமிழ் இலக்கியங்கள் சிறந்த மொழிபெயர்ப்பு மூலம் உலகின் ஒவ்வொரு மூலைக்கும் சென்றடைய வேண்டும்" என்றார்.

தமிழ்ப் பல்கலைக்கழக மொழி பெயர்ப்புத்துறைத் தலைவர் டாக்டர் பழனி.அரங்கசாமி வரவேற்புரை யாற்றினார். பாரதிதாசன் பல்கலைக்கழக ஆசிரியர் பயிர்சிப்பள்ளி இயக்குநர் டாக்டர் சீ.புருசோத்தமன் நன்றி கூறினார்.

## கட்டபொம்மன்....செப்பேடு

வீரபாண்டியக் கட்டபொம்மனின் அரிய செப்பேடு ஒன்றை முதல் முறையாகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கல்வெட்டியல் துறையினர் கண்டுபிடித்துள்ளனர்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ள 70 செப்பேடுகளை ஆதீனகர்த்தர் தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் அனுமதியுடன் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கல்வெட்டியல் துறை இணைப்பேராசிரியர் புலவர் செ.இராசு படி எடுத்து ஆய்வு செய்தார். அச்செப்பேடுகளின் இடையே பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டியக் கட்டபொம்மனின் செப்பேடு ஒன்றும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

28-1-1779ஆம் நாள் கட்டபொம்மனின் ஆட்சிக்குட்பட்ட சொந்தக் கிராமம், உம்பளக் கிராமம், சீவிதக் கிராமம், சிறுபாட்டுக் கிராமம், அமரக் கிராமம் ஆகியவைகளில் உள்ள கவிழ்த்துக் கட்டிய வீட்டில் (ஓட்டு வீட்டில்) வசிப்பவர்கள் வருடத்திற்குக் குறுணி தானியம் திருச்செந்தூர்க் கோயிலுக்கு அளிக்க வேண்டுமென்றும் அந்தத் தானியம் திருப்பணிச் செலவுகட்குப் பயன்பட வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது.

திருச்செந்தூர் குடநாட்டைச் சேர்ந்தது என்றும், திருச்செந்தூருக்குத் திரிபுவனமாதேவிச் சதுர்வேதிமங்கலம் என்பது பெயர் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. பாண்டியர் நாளில் வழங்கிய நாடு, ஊர்ப்பெயர்கள் 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் மாறாமல் வழங்கியதைக் காண்கின்றோம். முதல் பக்க இறுதியில் 'பாஞ்சாலங்குறிச்சிப் பட்டையம்' என எழுதப்பட்டுள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகச்
# செய்தி மலர்
திங்களிதழ்
பதிவெண் TN/TJ/20

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 007.
தமிழ்நாடு - இந்தியா.

இ.அ.அ. மட்டும்.

37) நிருவாக அதிகாரி
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

நூலகம் வீட்டு விளக்கம்
நூல் வாங்கும்
பழக்கம்
தமிழ்ப் பல்கலை...

THANJAVUR
18 X

INDIA
0.15
RUPEE

## தமிழ்ப் பல்கலைக்கழகப் புதிய வெளியீடுகள்

### களஞ்சியங்கள்

1. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-7
   ('கா' முதல் 'கேட்டோ' வரை) உரு.300/-
2. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-8
   ('கேட்புப் பொறுப்புகள்' முதல்
   'சிராசு-உத்-தௌலா' வரை) உரு.300/-
3. சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்
   தொகுதி-3
   ('ச' முதல் 'தோ' வரை) உரு.250/-
4. பெருஞ்சொல்லகராதி தொகுதி-1
   ('அ' முதல் 'அனைவோர்' வரை) உரு.200/-

கழிவு - 25%

### பிற நூல்கள்

1. வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை
   - ஆர். இராமநாதன் உரு. 60/-
2. கேரளத் தமிழர்களும் அவர்களின்
   சிக்கல்களும்
   - உ. சுப்பிரமணியம் உரு. 25/-
3. தமிழ் நாடகம் தோற்றமும்
   வளர்ச்சியும்
   - பழனி. அரங்கசாமி உரு. 7/-
4. தமிழ் யாப்பியலின் தோற்றமும்
   வளர்ச்சியும்
   - சோ. ந. கந்தசாமி உரு.100/-
5. தொல்காப்பியம்–சொல்லதிகாரம்–
   இளம்பூரணர் உரை
   - அடிகளாசிரியர் உரு. 45/-
6. திருக்குறள்–ஒரு உலக இலக்கியம்
   - தலைமை நீதிபதி ச. மோகன் உரு. 3/-
7. செந்தமிழ்க் காவலர் சிதம்பர-
   நாதனார் சிந்தனைத் திறம்
   - செ. வைத்தியலிங்கன் உரு. 6/-

கழிவு - 15%

### உறுப்பினர் கட்டண விவரம்

#### செய்திமலர் / நியூஸ்புல்லட்டின்

| | | |
|---|---|---|
| ஓராண்டு | உரு. 5/- | $ 4 |
| ஈராண்டு | உரு. 10/- | $ 8 |
| மூவாண்டு | உரு. 12/- | $ 10 |

#### தமிழ்க்கலை / தமிழ் சிவிலைசேசன்

| | | |
|---|---|---|
| தனியிதழ் | உரு. 15/- | $ 3 |
| 2 இணைப்பிதழ் | உரு. 30/- | $ 6 |
| ஓராண்டு | உரு. 60/- | $ 15 |
| ஐந்தாண்டு | உரு.240/- | $ 60 |

### களஞ்சிய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| அறிவியற் களஞ்சியம் | தொகுதி-1 | உரு.300/- |
| " " | தொகுதி-2 | உரு.300/- |
| " " | தொகுதி-3 | உரு.300/- |
| வாழ்வியற் களஞ்சியம் | தொகுதி-1 | உரு.300/- |
| " " | தொகுதி-2 | உரு.300/- |
| " " | தொகுதி-3 | உரு.300/- |
| " " | தொகுதி-4 | உரு.300/- |
| " " | தொகுதி-5 | உரு.300/- |
| " " | தொகுதி-6 | உரு.300/- |
| சங்க இலக்கியப் - பொருட்களஞ்சியம் | தொகுதி-1 | உரு.250/- |
| " " | தொகுதி-2 | உரு.250/- |

கழிவு : 25% அஞ்சற் செலவு தனி

பதிப்பாசிரியர் : இயக்குநர், பதிப்புத்துறை.
அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் - 613 001.